Source: *Tamil Murasu*, p3
Date: 1 November 2016

# கடல்துறைக்கு உதவ புதிய ஆய்வு, உருவாக்க நிலையம்

கடல்துறை, வெளிநாட்டுப் பொறியியல் துறையில் சிங்கப்பூர் தனது முன்னணித் தலைமைத்துவ நிலையைக் கட்டிக்காக்க விரும்புகிறது. இதனை நோக்கமாகக் கொண்டு நேற்று ஒரு நிலையம் தொடங்கப்பட்டிருக்கிறது.

அறிவில் தொழில்நுட்ப ஆய்வு முகவையும் (ஏஸ்டார்) சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகமும் அந்தப் புதிய ஆய்வு உருவாக்க நிலையத்தை தொடங்கியிருக்கின்றன.

'சிங்கப்பூர் வெளிநாட்டு, கடல் துறை தொழிலநுட்ப நிலையம்' என்ற அந்த நிலையம் இந்தத் தொழில்துறைக்கு அதிநவீன ஆய்வு, உருவாக்க வசதிகளை ஏற்படுத்தித் தரலாம் என நம்புகிறது. சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் இப்போது அமைக்கப்பட்டு வரும் ஆழ்கடல் கூடம் இத்தகைய வசதிகளில் ஒன்று. இது 2019ல் உருவாக்கி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆழ்கடல் சூழல் போன்ற பாவனைக் கூடமாக இது திகழும். இங்கு பலதரப்பட்ட பரிசோதனைகளை நடத்தி, கோட்பாடுகள் உருவாக்கப்படும் என்று இந்த இரண்டு அமைப்புகளும் தெரிவித்துள்ளன.

வர்த்தக, தொழில் அமைச்சர் (தொழில்) எஸ் ஈஸ்வரன் புதிய நிலையத்தை தொடங்கிவைத்தார். கடல்துறையும் புறப் பொறியியல் துறையும் சவால்களை எதிர்நோக்கி வரும் நேரத்தில் இந்த நிலையம் அமைவதாக அமைச்சர் கூறினார்.

இருந்தாலும் நீண்டகாலத்தை மனதில் கொண்டு அதைச் சமாளிப்பதற்கான ஆற்றல்களைத் தொடர்ந்து நாம் உருவாக்கி வர வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.